### கலைஞருடைய கனவுத் திட்டம் ; குடிசைகளே இல்லாத தமிழ்நாடு!

# ஓராண்டில் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட இலக்கு!

**சென்னை, ஜூன் 25-**

**தமிழ்நாட்டில் குடிசைகளே இல்லாத தமிழ்நாடு உருவாக்கப்படும் என்றும் கலைஞருடைய கனவு திட்டமான கிராமத்தில் வீடில்லா ஏழைகளுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டத்தால் ஒரு ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் இ.பெரியசாமி அறிவித்தார். மேலும் 15 அறிவிப்புகளையும் வெளியிட்டார்.**

## சட்டப்பேரவையில் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் இ.பெரியசாமி அறிவிப்பு!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் இ. பெரியசாமியின் பதிலுரை வருமாறு:

எங்கள் உடலிலும், உயிரிலும், ஊனிலும் என்றென்றும் நிலைத்திருக்கும் தலைவர் கலைஞர் இருக்கும் திசை நோக்கி முதலிலே வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருக்கக்கூடிய எங்கள் கழகத்தின் தலைவரும், தமிழகத்தின் மாண்புமிகு முதல்வருமான தளபதியார் அவர்கள் தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றிலேயே இதுவரை பதிக்க முடியாத தடத்தை பதித்திருக்கிறார். தொடர் வெற்றிகளுடைய நாயகன் எங்கள் உயிரினும் மேலான தலைவர், முதல்வர் தளபதியார் அவர்களை நான் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் இளைஞரணியினுடைய செயலாளர், அருமைத் தம்பி உதயநிதி அவர்கள் இந்த இயக்கத்தினை நாற்பதுக்கும் நாற்பது வெற்றி பெற வைப்பதற்காக வெயில் என்றும் பாராமல், மழை என்றும் பாராமல், இரவு என்றும் பாராமல் தமிழகம் முழுக்க சுற்றுப் பயணம் செய்து தன்னுடைய உழைப்பால் வெற்றியைப் பல்வேறு இடங்களிலே உறுதி செய்த கழகத்தினுடைய வருங்காலம் தம்பி உதயநிதி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையை பொறுத்தளவில் கிராமங்களை கட்டமைப்பதும், அதேசமயத்தில் கிராமங்களிலே ஒரு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக பல்வேறு அடிப்படைத் திட்டங்களை நிறைவேற்றுவதும் ஊரக வளர்ச்சித் துறையினுடைய பணி. அந்தப் பணி சிறப்பாக நடைபெற முதல்வர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற உடனே இந்தத் துறைக்கு, எல்லாத் துறைகளுக்கும் எந்தளவிற்கு அவர்கள் கவனம் செலுத்தியும், அவர்களுடைய சிந்தனையும், அவர்களுடைய எதிர்கால அறிவாற்றலையும், தொலைநோக்கு பார்வையையும் செயல்படுத்தினாரோ அதேபோலத்தான் எங்களுடைய ஊரக வளர்ச்சித் துறைக்கும் அவர்கள் செய்திருக்கின்ற சாதனைகள் ஏராளம். அந்த சாதனைகளை நான் இந்த நேரத்திலே உங்களுக்கு நீங்களே கண்கொள்ளாக் காட்சியாக பார்க்கிறீர்கள். இதிலே நம்முடைய முதல்வர் அவர்கள், தலைவர் கலைஞருடைய பாதையையும், வழியையும் அவர் பதித்த முத்திரைகளையும் மறக்காமல் பெரியார் நினைவு சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், இது போன்று எண்ணற்ற திட்டங்களை அவர்கள் நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாமல், தன்னுடைய சிந்தனையால் உருவான புதிய திட்டங்களையும், இன்றைக்கு அவர் உருவாக்கிய கலைஞருடைய திட்டமான கிராமத்தில் வீடில்லா ஏழைகளுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டம்.

1971 ஆம் ஆண்டில் முதல் முறையாக இந்தியாவிலேயே ஏழைகளுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டி வழிகாட்டிய தலைவர், தலைவர் கலைஞர் அவர்கள். அந்த வழியைப் பின்பற்றிதான் இன்றைக்கு கலைஞருடைய கனவு இல்லம் என்ற திட்டத்தை உருவாக்கி ஒரு ஆண்டிலேயே ஓர் இலட்சம் வீடு, 6 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலே குடிசைகளே இல்லாத தமிழகம், வீடே இல்லாத ஏழைகளுக்கு வீடு என்பதை உறுதி செய்திடும் வகையிலே அரசே முழுப் பொறுப்பேற்றுக் கொண்டு ஓர் இலட்சம் வீடுகளுக்கு இன்றைக்கு ரூ.3,500 கோடியை இந்த அளவிற்கு நிதியை வழங்கியவர் நம்முடைய தலைவர் தளபதியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கெல்லாம் இங்கே பேசிய உறுப்பினர்கள் பிரின்ஸ் ஆக இருந்தாலும், சதாசிவம் ஆக இருந்தாலும் மறந்து விடக் கூடாது. என்ன மறந்துவிடக் கூடாது என்றால், மேட்டூர் எல்லாம் குடிசையாக இருக்கிறது என்று சொன்னார். கண்டிப்பாக வீடுகள் கட்டித் தரப்படும், கவலைப்படாதீர்கள். நீங்கள் பட்டியலைத் தாருங்கள், நான் கட்டித் தரச் சொல்கிறேன். எதற்காக அதைச் சொல்கிறேன் என்றால், அவர் இன்றைக்கு உருவாக்கியிருக்கிற இந்தக் கலைஞருடைய கனவு இல்லம் எல்லா மாவட்டங்களிலும் AD கள் பரிச்சார்த்தமாக, நாம் சென்று அந்த Model Houseஐ பார்க்கிற அளவிற்கு கட்டி வைத்திருக்கிறார்கள். தனியார் வீடு கட்டி விலைக்கு விற்பதுபோன்று வீடு கட்டப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் அதைப் பார்க்கலாம். நீங்கள் இன்னொன்றையும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகள், 19962001 வரையில் கட்டப்பட்ட வீடுகள் IAY - Indira Awaas Yojana என்று பேசினார்களே, அந்த வீடுகள் ஓட்டு வீடுகள்.

### ரூ.2000 கோடியில் வீடுகள் பழுது பார்க்கப்படும்!

அவ்வாறு ஏற்கெனவே கட்டப்பட்ட ஓட்டு வீடுகள், கான்கிரீட் வீடுகள், ஆகியவற்றில் பழுதடைந்த வீடுகளை பழுது நீக்குவதற்காக 10 ஆண்டுகாலம் இதே அவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்தார்கள். அவற்றிற்கான செலவாக சிறிய அளவில் ரூ.50,000/ நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், அப்பணி நடைபெறவில்லை. இல்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உறுப்பினர்கள் ரூ.30.00 இலட்சம் நிதி அளித்தால், பெறப்படும் நிதியிலிருந்து அந்த ரூ.30.00 இலட்சத்தை பயன்படுத்தி, அந்த தொகுப்பு வீடுகளை நீங்களே சீரமைத்துக் கொடுங்கள் என்று கூறியதை நீங்கள் மறந்திருக்க முடியாது. உங்கள் நிதியிலிருந்துதான் அளிக்கப்பட வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். ஒரு குழந்தைகள் நல மையம் கட்டுவதானாலும் சரி, வீடுகள் சரிசெய்வதானாலும் சரி, ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் சரிசெய்து கொடுப்பதானாலும், அரசாங்க நிதி அளிக்கப்படவில்லை. ஆனால், கலைஞர் வழியில் வந்தார் என்று நான் சொல்வதற்குக் காரணமே, அந்த வழியில் வந்ததனால்தான் இலட்சோப இலட்ச சாதாரண ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் 100 சதவிகிதம் கட்டித் தர வேண்டுமென்ற யுக்தியை, பழுதுபார்க்கும் பணியை 2000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 இலட்சம் வீடுகள் பழுதுபார்க்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்கள். அதுதான் மிக முக்கியமான விஷயம்.

எங்கள் அரசில் 30 இலட்சம் ஒதுக்கீடு செய்வதோடு மட்டுமல்லாமல், வீடுகளுக்கு பழுதுபார்க்கின்ற பணியையும் செய்து தருகிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பழுதுபார்த்திருப்பார்கள். ஆனால், இந்த ஆண்டே, 1 இலட்சம் வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை பழுது நீக்கி சரிசெய்து கொடுக்கப்படும். இந்த பழுது நீக்கும் பணிக்கு வெறும் ரூ.50,000/ மட்டுமல்ல, Indira Awaas YojanaIAY திட்டத்தில் ஓட்டு வீடுகள் பழுதடைந்திருந்தால், ரூ.70,000 வரையில் அளிக்கலாம். குறைந்தபட்சம் ரூ.32,000/ முதல் ரூ.70,000/ வரையில் அளிக்கலாம். அதேபோன்று கான்கிரீட் வீடுகள் பழுதடைந்திருந்தால், அவற்றிற்கு கூரை பழுதுபட்டிருந்தால், ரூ.1.50 இலட்சம் வரை வழங்கலாம். ரூ.50,000 எங்கே இருக்கிறது? ரூ1.50 இலட்சம் எங்கே இருக்கிறது? சாதாரண பழுதுகளை நீக்குவதற்கு ரூ.70,000/ ஆனால் ரூ.1.50 இலட்சம் நிதியை தாராளமாக வழங்கலாம் என்று, ஏழை எளிய மக்களுக்காக வாழ்கின்ற மாண்புமிகு முதல்வர், தளபதியார் அவர்கள் இன்றைக்கு 2,000 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இத்திட்டம் இந்த ஆண்டே நிச்சயமாக சிறப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### ரூ.1009 கோடி மதிப்பில் 6600 வகுப்பறைகள்!

குறிப்பாக, குழந்தைகள் நலப் பள்ளி. சென்ற வருடம் வேலூரில் ரூ.825 கோடி ஏற்கெனவே ஒதுக்கப்பட்டது. இந்தப் பள்ளிகளுக்கு ரூ.825 கோடி அறிவித்து மற்றும் அதன் தொடர்ச்சியாக இந்தப் பள்ளிகளுக்கு உறுப்பினர்கள் கேட்காமலேயே ரூ.184 கோடி அளித்து, மொத்தமாக ரூ.1009 கோடி நிதி அளித்து, 6600 வகுப்பறைகளில் ஏறத்தாழ 5,200 வகுப்பறைகள் தொடர்ந்து கட்டி கிட்டத்தட்ட முடிக்கப்பட்டுவிட்டன. முதலில் அளிக்கப்பட்ட ரூ.825 கோடி நிதிக்கு அவை கட்டப்பட்டுவிட்டன. இதில் என்ன சிறப்பு என்பதை உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். அந்தப் பள்ளி, குழந்தைகள் நேயப் பள்ளி, childfriendly school. பெருந்தலைவர் காமராஜர் அவர்களது காலத்தில் 1954 ஆம் ஆண்டு ஓட்டுக் கொட்டகைப் பள்ளியில் உறுப்பினர் பிரின்ஸ் அவர்கள் அங்கு படித்திருப்பீர்கள். அந்தப் பள்ளிகளெல்லாம் இன்றைக்கு பழுதுபட்டிருந்தால், அவற்றை தரமான பள்ளிகளாக தரம் உயர்த்தி, மேலும் 100 ஆண்டு காலத்திற்கு சிறந்த முறையில் இயங்கும் வகையில் கட்டப்படுகின்றன. குழந்தை நேய பள்ளி என்பது முதல்வர் அவர்கள் சிந்தனையில் உதித்த அந்தப் பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பிக்கின்ற அந்தப் பணி, புதிய பள்ளிக்கூடங்களைக் கட்டிக்கொடுக்கின்ற அந்தப் பணி, மேலும் சொல்வதென்றால், latest ஆன முறை



யில் பள்ளிக்கூடக் கட்டடங்களும் வகுப்பறைகளும் கட்டப்படுகின்றன. குழந்தைகளுக்கு குளிர் சாதன வசதிகளும் தேவையில்லாத அளவில் காற்றோட்டமான மிக உயரமான கட்டடங்கள், மேலும் கூற வேண்டுமானால், குழந்தைகள் அப்பள்ளிகளில் இருக்கின்ற படங்களைப் பார்த்தார்களேயானால்இன்றைக்கு Smart Class Room எவ்வளவு சிறப்பான முறையில் இருக்கிறதோ அதே போன்று தரம் உயர்த்தப்பட்டு, அதே நேரத்தில் உறுதியுடனும் கட்டப்பட்டுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் அதிக அளவிலான நிதயை ஒதுக்கி தரம் உயர்த்தியுள்ளார்கள். ஏற்கெனவே ஒரு வகுப்பறைக்கு ரூ.12 முதல் 15 இலட்சம் வரையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது ரூ.30 இலட்சம் அரசின்மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு 6,600 வகுப்பறைகள் இந்த ஆண்டே கட்டி முடிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன்.

காமராஜருக்குப் பிறகு வேறு யாரும் அவர் கட்டிய பள்ளிக் கட்டடங்களை திரும்பி கூட பார்க்கவில்லை. சதன் திருமலைக்குமார் அவர்கள் கூறியதுபோன்று அவ்விடத்தில் நூலகங்கள், கிராமப்புறத்திலிருக்கின்ற நூலகங்கள், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய கழிப்பறை வசதிகள், தற்போது இருக்கக்கூடிய அனைத்து பள்ளிகளுக்கான சுற்றுச்சுவர்

## புதியதாக 8 இடங்களில் பெரியார் நினைவு சமத்துவ புரங்கள் அமைக்கப்படும்!

போன்றவை கட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அனைத்து கிராம ஒருங்கிணைந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஏற்கெனவே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நாம் ஆரம்பித்தோம். அது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முத்தான திட்டம். அவர் அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கும்போது அன்றைக்கு ஒரு ஊராட்சிக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கினார். 1996 ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபாய் கொடுத்தால் இன்றைக்கு அதன் மதிப்பு எத்தனை கோடி. நீங்கள் நன்றாக பார்க்க வேண்டும். இது ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு ஊராட்சி. இப்போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 5 ஆண்டுகளில் 12,525 பஞ்சாயத்துகளில், இதுவரை 69 ஆயிரம் பணிகள் எடுக்கப்பட்டது.

69 ஆயிரம் பணிகளில், 10,187 பஞ்சாயத்துகளில் 55 ஆயிரம் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டன. இன்னும் 2,338 பஞ்சாயத்துகளில்தான் பணிகள் முடிக்க வேண்டும். அந்தப் பணிகளை முடித்துவிட்டால் ஐந்தே ஆண்டுகளில் அனைத்துப் பணிகளும் முடிந்துவிடும். ஆக, தொடச்சியாக ஒருங்கிணைந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக குளங்களைத் தூர் வாருவது, மின்விளக்கு வசதி, சாலை வசதி போன்ற அனைத்து வசதிகளும் இன்றைக்கு செய்யப்பட்டு வருகின்றன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தால் தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் அனைத்துத் திட்டங்களையும் முடிப்பதற்கு நாம் தயார் நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். முதலமைச்சர் அவர்களுடைய கிராமச் சாலைகள் திட்டம் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். கடந்த ஆண்டு 10 ஆயிரம் கி.மீ. சாலைகளுக்கு ரூபாய் 4 ஆயிரம் கோடி கொடுத்தார்கள். அதில் 8,200 கி,மீ.க்கு சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தச் சாலைகள் தமிழக அரசினுடைய பெயரை வானுயர உயர்த்திப் பிடித்திருக்கிறது. இல்லையா என்பதை நீங்கள் மனசாட்சியைத் தொட்டுப் பார்க்க வேண்டும். இருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறைக்கு சமமான அளவிற்கு இன்றைக்கு சாலையின் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

சிமெண்ட் சாலைகள், முதலமைச்சர் கிராமப்புற சாலைத் திட்டம் என்றுதான் பெயர். அதற்கு முன்னால் அதற்கு இருந்த நிதி என்பது மிகவும் குறைவு. இப்போது 60 இலட்சம் வரை கொடுத்து, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற அளவிற்கு அந்தச் சாலைகள் இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. 10,000 கி.மீ. சாலையில் 8,200 கி.மீ. சாலை போடப்பட்டது. இந்த ஆண்டிற்கு 2,000 கி.மீ. சாலை போடுவதற்கு ரூ.1000 கோடி நிதி வரும். இன்னும் வரும். நாங்கள் கேட்காமலேயே வரும். நான் அதை நம்புகிறேன். நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாங்கள் கேட்காமலேயே இதையெல்லாம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மொத்தம் தமிழ்நாட்டில் இந்த ஆட்சி வந்த பிறகு கடந்த ஆண்டு 1,48,000 கி.மீ. சாலைகள் இருந்தன. 1,48,000 கி.மீ. சாலைகளில் 10,000 கி.மீ. சாலை நிறைவு பெறுகிறது. இந்த ஆண்டு 2,000 கி.மீ. சாலை நிறைவு பெறும். மொத்தம் 12,000 கி.மீ. இது போக பிரதம மந்திரி சாலைத் திட்டத்தில் 1,945 கோடி ரூபாயில், கிட்டத்தட்ட 2,700 கி.மீ.க்கு இந்த ஆண்டு இப்பொழுது ஒப்பந்தம் கோரப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஆக தொடர்ச்சியாக, கிராமப்புற சாலைகள் தமிழ்நாட்டில் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் ஒரு விஷயம், 1,38,000 கி.மீ. என்பது தமிழ்நாட்டில் உள்ள மொத்த சாலைகளின் நீளத்தை நீங்கள் அளந்தால், அதில் 65 சதவிகிதம் கிராமப்புறத்தில் இருக்கிற சாலைகள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

### ரூ.260 கோடி மதிப்பீட்டில் சமத்துவபுரங்கள் சீரமைப்பு!

பெரியார் நினைவு சமத்துவபுரம் யாரும் மறக்க முடியாது. முதலாண்டு வந்த உடனே தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவாக அவர் மிகவும் விரும்பி ரசித்து, இங்கிருக்கக்கூடிய அமைச்சர்கள் அனைவருக்கும் தெரியும். 10 ஏக்கர் நிலத்தில் அனைத்து வசதிகளுடன் பெரியார் நினைவு சமத்துவபுரம் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள். அந்த சமத்துவபுரத்தை பின்னால் வந்த ஆட்சியாளர்கள் கிடப்பில் போட்டு விட்டார்கள். பின்னர், அவர் ஆட்சிக்கு உடனுக்குடன் வந்தவுடன் 149 சமத்துவபுரத்திற்கு முதன்முதலாக கிட்டத்தட்ட 190 கோடி அளவிற்கு செலவழித்து, அதற்குப் பிறகு 88 சமத்துவபுரத்திற்கு 260 கோடி ரூபாய் மொத்தம். கிட்டத்தட்ட 238 சமத்துவபுரத்திற்கு 260 கோடி ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து, பழுதடைந்த வீடுகள் எல்லாம் புது வீடுகளாக முழுமையாக கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் பார்க்கலாம். எல்லாப் பகுதியிலும் உள்ள வீடுகளைப் பார்க்கின்றபோது சிறிது பழுது அடைந்திருந்தாலும், அந்த வீடுகள் புது வீடுகளாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சமத்துவபுரம் புதுப்பிக்கப்பட்டது அல்ல. இன்னும் 25, 30 வருடத்திற்கு சமத்துவபுரம் இருக்கும்.

ஆக அந்தளவுக்கு இன்றைக்கு சமத்துவபுரங்கள் அவருடைய பெயரை சொல்லிக் கொண்டிருக்கின்றன. இதனுடைய தொடர்ச்சியாக, நம்முடைய சமத்துவபுரம் இந்த ஆண்டு 2024 - 2025ல் கடலூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், விருதுநகர், திருச்சி, திருவண்ணாமலை, திண்டுக்கல் ஆகிய 8 சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிரதமமந்திரி ஊரக குடியிருப்பு திட்டம். நாம் ஆட்சிப்பொறுப்பேற்றதற்கு பின்னர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கிட்டத்தட்ட 3 இலட்சம் வீடுகளை கட்டி முடித்திருக்கிறோம். அதற்கு முன்னர், ஐந்தாண்டு காலத்தில் 20162021 வரை 2 இலட்சத்து 82 ஆயிரம் வீடுகள்தான் கட்டினார்கள். நாம் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, தற்போது மூன்று வருடத்தில் 3 இலட்சம் வீடுகள் முடித்திருக்கிறோம். இதுதான், இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சிக்கும், கடந்த கால ஆட்சிக்கும் உள்ள வேறுபாடு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது போக, தற்போது மீதமுள்ளது பிரதம மந்திரி வீடுகட்டும் திட்டத்தில் இன்னும் 97 ஆயிரம் வீடுகள்தான் பாக்கி இருக்கின்றன. இதில் மத்திய அரசின் பங்கு என்பது 38 சதவீதம் தான். 60:40. மாநில அரசு 60 சதவிகிதம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதிலேகூட மனமுவந்து 60:40 என ஏற்றுக்கொண்டு 3 இலட்சம் வீடுகளை மூன்றே வருடத்தில் கட்டியிருக்கிறோம். அவர்கள் காலத்தில் 2.82 இலட்சம் வீடுகள்தான் கட்டப்பட்டன. அதேசமயத்தில் பசுமை வீடுகளைப் பொறுத்தவரையில் 24 ஆயிரம் வீடுகளைக் கட்டாமலேயே போய் விட்டார்கள். தற்போது நாம் அதனைக் கட்டி முடித்து, இன்னும் 193 வீடுகள் தான் பாக்கி இருக்கின்றன. அவர்கள் கட்டியிருந்தாலும் அதை கைவிடாமல் தொடர்ந்து அதை நிறைவேற்றக்கூடிய அரசாக இந்த அரசு இருக்கிறது.

ஜல்ஜீவன் திட்டத்தைப் பொறுத்தளவில், இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால், நாம் கிட்டத்தட்ட வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சர் MI tanks கேட்டார். எந்த நிதியிலிருந்து கொடுக்க முடியும். ஜல்ஜீவன் திட்டத்திலிருந்து நம்முடைய வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அந்த ஜல்ஜீவன் திட்டத்தில் அவருடைய செயலாளர் இன்றைக்கு தலைமைச் செயலாளராக இருக்கக்கூடிய சிவதாஸ்மீனா அவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவரை அழைத்து சொன்னார்கள். உடனே அவர் 209 கோடி ரூபாய் கொடுத்தார். தொடர்ச்சியாக கொடுத்தார் முதலமைச்சர். பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து, ஏறத்தாழ 947 கோடி ரூபாயில் 5500 உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு—இதற்கு முன்னரெல்லாம் என்ன உயரம் இருந்தது என்றால், மொத்தம் 7 மீட்டர் தான். ஒரு water tank 7 மீட்டர் தான் இருக்கும்.

தற்போது அதை உயர்த்தி, மேடான பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர், மேட்டில் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் தண்ணீர் போக வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ 12 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தி இன்றைக்கு தண்ணீர் வழங்குவதற்காக அந்தப் பணிகள் அதிவேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்போது tank வேண்டுமென்று நிறையபேர் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். கொடுத்துக்கொண்டே இருந்தோம். இனிமேல், அடுத்த வருடத்திலிருந்து tank கேட்பதற்கு யாரும் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டில் அனைத்து tankகளும் கிராமப்புறங்களில்—தற்போது வீதி வீதிக்கு ஒரு tank கேட்க ஆரம்பித்து விட்டார்கள். இது தான், தேவை என்பது Wants are unlimited என்று சொல்வார்கள். தேவை என்பது அளவில்லாதது. எப்பொழுதும் கேட்டுக்கொண்டேயிருப்பார்கள். நிறைவேறினாலும் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். எவ்வளவு கொடுத்தாலும் நிதி போதாதுதான். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் நிதிநிலைமை இல்லையென்றாலும், அதை சிக்கனமாகப் பயன்படுத்தி, அத்தியாவசியமான நகராட்சி நிர்வாகத் துறைக்காக ஏராளமான நிதியை ஒதுக்கி தந்திருக்கிறார்கள்.

இதிலும் இன்றைக்கு ஜல்ஜீவன் திட்டத்தில் நாம் ஒரு கோடியே நான்கு இலட்சம் வீடுகளுக்கு குழாய் இணைப்பு வழங்கியிருக்கிறோம். மொத்த வீடுகள் 1 கோடியே 25 இலட்சம் வீடுகள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஜல் ஜீவன் திட்டத்தில் கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் மீதமுள்ள 21 இலட்ச வீடுகளுக்கும் குழாய் இணைப்பு அளித்து விடுவோம். ஆக, அந்தளவுக்கு இன்றைக்கு இந்தத் துறையைப் பொறுத்தளவில் சிறப்பாக திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நமக்கு நாமே திட்டத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. நூறு கோடி முதலில் அறிவித்தார்கள். பின்னர் நூற்றைம்பது கோடி வரைக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள், மகிழ்ச்சி.

அடுத்து, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் SCPAR - Scheme Component of Pooled Assigned Revenue. அதன் மூலம் வரக்கூடிய வருவாய் முழுமையாக பயன்படுத்தப்படுகிறது. அதில், 102 பணிகளில், ஊராட்சி ஒன்றிய கட்டடங்கள் கட்டுதல், மாவட்ட ஊராட்சி கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பொதுவான பணிகளான எரிவாயு தகன மேடை அமைப்பது உள்ளிட்ட பணிகளும் அடங்கும். நகராட்சி, பேரூராட்சியின் சார்பாகத்தான் எரிவாயு தகன மேடை கட்டப்படும். கடந்த ஆண்டில் 10 எரிவாயு தகன மேடைகள், இந்த ஆண்டில் 10 எரிவாயு தகன மேடைகள் கட்டப்பட்டுள்ளன. இத்தகைய 102 பணிகளுக்காக அந்த நிதியிலிருந்து

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்